**DEPOSITION OF WITNESS(CIVIL)**
**IN THE COURT OF II ADDITIONAL JUDGE.**

**Case No. : O.S. No. 4703/2024** **Date: 10.08.2026**

**PW-2**

Name : ராமகிருஷ்ணன்

Father's Name : வரதராஜன்

Village : பெசன்ட் நகர், சென்னை

Taluk : சென்னை Age: 68

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of August 2026.

-----------------------------------------------------------------------------------

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

இந்த வழக்கு எதற்காக போடப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் General Body meeting நடக்கும் போது 2ம் பிரதிவாதி வாதி பாலாஜி அலுவலகத்தை பூட்டிவிட்டு வெளிநாடு சென்றுவிட்டதாக சொன்னார். அலுவலக ஆவணங்களை சத் சங்கத்திற்கு ஒப்படைக்காமல் போய்விட்டார் என்றும் கூறினார். கும்பாபிஷேகத்திற்கு பாலாஜி என்பவர் நன்கொடைகள் வசூலித்தார் என்றும் சொன்னார். அப்போது அங்கிருந்த உறுப்பினர்கள் அனைவரும் இந்த விபரத்தை கேட்டார்கள். பாலாஜி இந்த வழக்கை அவதூறு வழக்காக தாக்கல் செய்துள்ளார். 2014ல் வாதி பாலாஜி தர்காராக நியமிக்கப்பட்டார். அதற்கு முன்பு அவர் உறுப்பினராக இருந்தார். நிறைய கைகரியங்கள் செய்தார். எங்கள் சங்கத்தின் விதிகளின் படி யார் தலைவராக இருத்தாரோ அவர் மேற்படி சங்கத்தின் தர்காராக வருவார் என்றால் எனக்கு தெரியாது. சத் சங்கத்தின் தலைவரின் பதவி காலம் எனக்கு தெரியாது. வாதி பாலாஜி தர்காராக நியமிக்கப்பட்ட ஆறு மாத

காலத்திலேயே வேறு ஒரு தர்கார் நியமிக்கப்பட்டது எனக்கு தெரியாது. வாதி பாலாஜி 22.04.2019 அன்று Joint commissioner, HR&C வாதி பாலாஜி தக்காராக பதவி வகிக்க தகுதியில்லை என்று உத்தரவு பிறப்பித்து அவரை விடுவித்தது என்று வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவர் 2014லேயே வாதி பாலாஜியின் தக்கார் பதவி காலம் முடிந்துவிட்டது என்றாலும், ஆனால் அவர் 2019 வரை அந்த தக்கார் பதவியிலேயே வசித்து வந்தார் என்றாலும் எனக்கு அது தெரியாது. வாதி பாலாஜி வெளிநாடு செல்லும் போது விக்கிரகங்களுக்கு சாத்த வேண்டிய நகைகளை அலுவலகத்தில் உள்ள பீரோவில் வைத்து பூட்டி விட்டு சாவியை எடுத்து கொண்டு சென்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதே போல் கணக்கு வழக்குகள் அவர் ஒப்படைக்க வேண்டும் என்றாலும், அதையும் அலுவலகத்தில் வைத்து பூட்டி விட்டு சென்றுவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. வாதி நான் சாட்சி சொல்ல வேண்டும் என்றும் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்ய வேண்டும் என்று சொன்னதால் நான் என்ன உண்மை நடந்ததோ அதை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். வாதி பாலாஜி கணக்கு வழக்குகளை ஒப்படைக்காமல் சென்ற விபரம் எனக்கு தெரியாது என்று சொல்லியுள்ள பட்சத்தில் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் அவர் கணக்கு வழக்குகளை கொடுக்காமல் சென்றார் என்ற விபரம் தவறு என்று மாறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவர் எப்போதும் போல் அலுவலகத்தை சாற்றிவிட்டு தான் செல்வார். அவர் ஊருக்கு போன விபரம் தெரியாது. வாதி பாலாஜி அலுவலகத்தின் சாவியை எப்போது இந்து அறநிலை துறைக்கு கொடுத்தார் என்றால் சிறிது காலம் கழித்து தான் கொடுத்தார். அவர் எப்போது கொடுத்தார், ஏன் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வாதி பாலாஜியின் மீது

நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்த பிறகு 09.06.2024 ல் தான் சாவியை கொடுத்தார் என்றால் தெரியாது. அதன் பின்னிட்டு பாலாஜி என்னிடம் இந்த விபரத்தை சொன்னாரா என்றால் சொன்னார். வாதி பாலாஜி கடவுளுக்கு சாத்த வேண்டிய நகைகளை அலுவலகத்தில் வைத்து பூட்டிவிட்டு சென்றது முறையா முறையில்லையா என்றால் அவர் இருக்கும் போது எப்போதும் பூட்டி வைத்துவிட்டு செல்வார். சாவியை யாரிடம் கொடுத்துவிட்டு சென்றார் என்ற விபரம் எனக்கு தெரியாது. நகைகளையும், கணக்குகளையும் அடுத்த தக்காரிடம் வாதி ஒப்படைத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த தக்கார் 1ம் பிரதிவாதி என்றாலும், அவர் பெயர் ராமகிருஷ்ணன் என்றாலும் சரிதான். வாதி வெளிநாடு சென்றுவிட்டு எப்போது வந்தார் என்று எனக்கு நினைவில்லை. வாதி கடந்த 9 ஆண்டுகளாக தக்கார் என்று தன்னையே அழைத்துக்கொண்டு நகைகளையும், கணக்குகளையும் தன் வசமே வைத்துக்கொண்டார் என்றால் எனக்கு தெரியாது.

**(பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளை ஏற்று குறுக்கு விசாரணை பகுதியாக நிறுத்தி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Dt. 10.08.2026

Sd./- Dr. R.Sathya, M.L., Ph.D.,
I Addl Sessions Judge
II Addl. District Judge, FAC